**யாழினி** இப்போது புரிந்துகொண்டேன். பாரதிதாசனுக்குப் புரட்சிக்கவி என்ற பட்டம் வழங்கியதாகக் கூறினீர்களே? அவருக்கு யார் கொடுத்தார்கள், அப்பா?

**அப்பா** தந்தை பெரியார்தாம் 'புரட்சிக்கவி' என்ற பட்டத்தைப் பாரதிதாசனுக்குக் கொடுத்தார். தமிழின் சிறப்பை, பொதுவுடைமையை, பெண்ணின் பெருமையைப் பாடியவர் பாரதிதாசன்.

**யாழினி** அப்பா, பாரதிதாசனின் பாடலொன்றைச் சொல்லுங்களேன்.

**அப்பா** சொல்கிறேன், யாழினி. "தமிழுக்கும் அமுதென்று பேர்… அந்தத்தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாடித் தமிழ்மீது தாம் கொண்டிருக்கும் பற்றை வெளிப்படுத்தினார். அதுமட்டுமன்று, இயற்கை, பெண்விடுதலை போன்ற பல கருத்துகளை முன்வைத்து நிறைய பாடல்களைப் பாடியுள்ளார். அவருடைய பாடல்களைப் பாரதிதாசன் கவிதைகள் என்னும் பெயரில் வெளியிட்டுள்ளனர்.

**யாழினி** அப்பா, இங்கே பாருங்களேன். இந்தப் புத்தகத்தின் பெயர் 'இருண்ட வீடு' என்றிருக்கிறது.

**அப்பா** இந்தப் புத்தகம்கூடப் பாரதிதாசன் எழுதியதுதான். 'குடும்பவிளக்கு' என்னும் நூலில் கல்வியின் உயர்வைச் சொன்னவர், இருண்ட வீட்டில் கல்லாமையின் இழிவைக் கூறுகிறார்.

**யாழினி** அப்பா, இங்கே பல நூல்களில் அவர் பெயர் இருக்கிறதே!

**அப்பா** ஆமாம் யாழினி. அத்தனையும் பாவேந்தர் பாடியதுதாம். அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, தமிழியக்கம், குறிஞ்சித்திட்டு, புரட்சிக்கவி, இசையமுது….. என 72 நூல்களுக்கு மேல் பாடி, தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார். பாரதிதாசன்.

**யாழினி** அப்பா, அங்கே பாருங்கள். பக்கத்து வீட்டு பூங்குழலி!

**அப்பா** அடடே, வாம்மா, பூங்குழலி. எங்கே இந்தப்பக்கம்?

**பூங்குழலி** வணக்கம் மாமா. பள்ளி நாடகத்தில் நடிப்பதற்காகப் பாரதிதாசனின் 'பிசிராந்தையார்' நூலைத் தேடிப் படிக்க வந்தேன்.

**யாழினி** அப்பா, பாரதிதாசன் நாடகங்கள்கூட எழுதி இருக்கிறாரா?

**அப்பா** ஆம். 33 நாடகங்களுக்குமேல் எழுதியுள்ளார். பூங்குழலி வாசிக்க விரும்பும் 'பிசிராந்தையார்' நாடக நூல் "சாகித்திய அகாதெமி" விருது பெற்றுள்ளது.

**யாழினி** முத்தமிழிலும் வல்ல நம் பாவேந்தரின் நூல்களை இனிமேல் நானும் படிக்கப் போகிறேன், அப்பா.

**அப்பா** புதுவை தந்த பாவேந்தர் பாரதிதாசன் பெயரால், தமிழக அரசு ஆண்டுதோறும் சிறந்த தமிழறிஞர்களுக்கு விருது வழங்கிச் சிறப்பு செய்கிறது.

**யாழினி** மகிழ்ச்சியாக இருக்கிறது. இவர் மட்டுமின்றி, வேறு யாரேனும் தமிழ்ச் சான்றோர்கள் புதுவையில் உள்ளனரா, அப்பா?

**அப்பா** பலர் இருக்கின்றனர். அவர்களுள் வாணிதாசன், புதுவை சிவம், தமிழ்ஒளி, பிரபஞ்சன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்..



**பூங்குழலி** வாணிதாசனைப்பற்றிச் சொல்லுங்கள் மாமா.

**அப்பா** தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய மொழிகள் அறிந்தவர் வாணிதாசன். ரமி என்று புனைபெயரில் எழுதிய இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் எத்திராசலு என்கின்ற அரங்கசாமி.

**யாழினி** அவரின் படைப்புகளைப் பற்றிக் கூறுங்கள் அப்பா.

**அப்பா** பாரதிதாசன் நடத்திய தமிழ் வகுப்பில் அவரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தவர்கள் கவிஞர் வாணிதாசனும், புதுவை சிவமும் ஆவர். பாரதியாரின் பிறந்த நாள் அன்று, "பாரதிநாள் இன்றடா பாட்டிசைத்து ஆடடா" என்று வாணிதாசன் பாடிய பாடல், அவருக்கு முதற்பரிசைப் பெற்றுத் தந்தது.

**பூங்குழலி** அப்படியென்றால், வாணிதாசனுக்கும் புதுவை சிவத்திற்கும் கவிதை எழுதக் கற்றுத் தந்தவர் பாரதிதாசனா மாமா?



**அப்பா** ஆமாம். யாப்பு இலக்கணம் பயின்றதோடு, புலவர் தேர்வு எழுதியும் இருவரும் தேர்ச்சி பெற்றனர். பாவேந்தரின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட்ட இருவருமே பல்வேறு நூல்களை எழுதியுள்ளனர். வாணிதாசனின் 'கொடி முல்லை' என்னும் நூல் சிறப்பு பெற்றது.

**யாழினி** புதுச்சேரி அரசு இவர்களைப் பெருமைப்படுத்தியுள்ளதா, அப்பா?

**அப்பா** ஆமாம். புதுச்சேரி அரசு இவர்கள் இருவரின் நூற்றாண்டு விழாக்களையும் மிகச் சிறப்பாக நடத்தியது. மேலும், ஆண்டுதோறும் பிறந்தநாள் விழாக்களையும் நடத்தி வருகிறது. தமிழக அரசு, பாவேந்தர் விருதினை இவர்கள் இருவருக்கும் வழங்கிச் சிறப்பித்தது.



**யாழினி** அப்பா, தமிழ்ஒளியைப் பற்றிச் சொல்லுங்களேன்.

**அப்பா** ஓ! சொல்கிறேனே. "சீறி அடித்துச் சுழன்ற அலைகளில் சிக்கிய ஒரு படகாய் தடுமாறி இளைத்து மடிந்த மகாகவி தன்சரிதம் உரைப்பேன்" என்று பாரதியாரைப் பற்றிப் பாடியவர், கவிஞர் தமிழ்ஒளி.



5th_Tamil_Term 3.indd 44 7/22/2019 10:14:22 AM

**யாழினி** இவரின் இயற்பெயரே தமிழ்ஒளியா, அப்பா?

**அப்பா** இல்லையில்லை. இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர், விஜயரங்கம். இவரும் பாரதிதாசனின் மாணவர்தாம். தமிழ்ஒளி என்னும் பெயரில் இவர், தம்மைக் கவிஞராக அறிமுகப்படுத்திக் கொண்டார்.

**யாழினி** இவரது படைப்புகள் பற்றிச் சொல்லுங்கள், அப்பா.

**அப்பா** மாணவப் பருவத்திலேயே இவரது தமிழ்ப்பணி தொடங்கிற்று எனலாம். இவரது முற்போக்கான கருத்துகள், பாடலில் எதிரொலித்தன. கல்லூரிக் காலத்தில், 'சிற்பியின் கனவு' என்னும் மேடை நாடகத்தைப் படைத்துள்ளார். இந்த நாடகம்தான் பின்னாளில் 'வணங்காமுடி' என்னும் பெயரில் திரைப்படமாக எடுக்கப்பட்டது. இதில் நடித்தவர், நடிகர் திலகம் சிவாஜிகணேசன்.

**யாழினி** வேறு என்னென்ன நூல்களை எழுதியுள்ளார், அப்பா?

**அப்பா** வீராயி, கவிஞனின் காதல், நிலைபெற்ற சிலை என்னும் குறுங்காவியங்களைப் படைத்துள்ளார். இந்நூல்களைப் பற்றிய திறனாய்வு, சென்னை வானொலியிலும் திருச்சி வானொலியிலும் ஒளிபரப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவை மட்டுமின்றிக் கவிதைத் தொகுப்புகள், குழந்தைப் பாடல்கள், ஆய்வு நூல்கள், கதைகள், குறுநாவல்கள் முதலியவற்றையும் படைத்துள்ளார். இவரது 'விதியோ, வீணையோ' என்னும் காவியம், சிலப்பதிகாரத்திற்குப் பின் தோன்றிய இசை நாடகமாகக் கூறப்படுகிறது.

**பூங்குழலி** இவரது பாடல்கள் பாடநூல்களில்கூட இடம்பெற்றுள்ளதாக என் தந்தை கூறியுள்ளார், மாமா.

**அப்பா** ஆமாம், பூங்குழலி. இவரது 'முன்னும் –பின்னும்', 'அணுவின் ஆற்றல்' ஆகிய இரண்டு பாடல்கள்தாம் அவை. அவை மட்டுமல்ல, இவரது 'மாதவி காவியம்' என்னும் நூல், கல்லூரிப் பாடநூலாகவும் வைக்கப்பட்டது இவருக்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

**பூங்குழலி** மாமா, இலக்கியங்கள் படைத்தவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டோம். இலக்கண நூல்கள் எழுதிய சான்றோர்களும் புதுவையில் இருந்தார்களா?



**அப்பா** ஓ! இருந்தார்களே! தமிழில் பிழையின்றி எழுதுவது குறித்த நூல்களைப் படைத்தவர், இலக்கணச் சுடர் இரா. திருமுருகன். இவர், தனித்தமிழ்ப் பற்றால் சுப்பிரமணியன் என்ற தம் பெயரைத் 'திருமுருகன்' என்று மாற்றி அமைத்துக் கொண்டார்.

**பூங்குழலி** உடற்கொடை ஈந்தாரே அவரா மாமா?




5th_Tamil_Term 3.indd 45 7/22/2019 10:14:22 AM

**அப்பா** ஆமாம். அவர்தாம். நூறு சொல்வதெழுதுதல், 17 தமிழ்ப்பாடநூல்கள், ஆய்வு நூல்கள், வரலாற்று நூல்கள், பாவலர் பண்ணை, என் தமிழ் இயக்கம் போன்ற பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். இவரும் சாகித்திய அகாதெமி விருது பெற்ற ம. லெனின் தங்கப்பாவும் இணைந்து நடத்திய 'தெளிதமிழ்' இதழ் இன்றும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.

**யாழினி** அப்பா கேட்கவே மகிழ்வாக இருக்கிறது.

**பூங்குழலி** மாமா, அண்மையில் மறைந்த எழுத்தாளர் பிரபஞ்சனும் புதுவையில் தோன்றியவர் என்று கேள்விப்பட்டேன், உண்மையா?



**அப்பா** ஆமாம். இவரும் புதுவைக்காரர்தாம். இவர், தம் எழுத்தால் தாய்நாட்டைப் போற்றச் செய்தவர்; உலகம் போற்றும் உயர்ந்த எழுத்தாளர்; எண்ணற்ற சிறுகதைகள், நாவல்கள், வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். இவரது 'வானம் வசப்படும்' என்ற நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவரது உடல், புதுவை அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது என்பது தமிழுக்குக் கிடைத்த சிறப்பாகும்.

**யாழினி** அப்பப்பா! புதுவை படைப்பாளிகள் பலர் தமிழுக்கு வளம் சேர்த்துள்ளனரே! இவர்கள், தமிழால் இமயம்போல் உயர்ந்து நிற்பவர்கள்.

**பூங்குழலி** ஆமாம், யாழினி. முத்தமிழ் போற்றும் நம் முன்னோர்களை வணங்குவதோடு அவர்களின் நூல்களையும் நாம் தேடித் தேடிப் படிப்போம்.

**அப்பா** உங்கள் எண்ணம் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. உங்களின் ஆர்வம் எப்போதும் நல்ல வழிகாட்டியாக அமையும். மேலும், புதுவையில் தமிழ் வளர்த்த அறிஞர்கள் பலர் உள்ளனர். அவர்களைப் பற்றி வேறொரு நாளில் பேசுவோம்.

## கற்பவை கற்றபின்

- நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்திச் சரியான ஒலிப்புடன் படித்துக்காட்டுக.
- தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய புதுவை படைப்பாளிகளைப் பற்றிய செய்திகளைத் திரட்டுக.



5th_Tamil_Term 3.indd 46 7/22/2019 10:14:22 AM

மதிப்பீடு

# படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

JD8ACL

1. 'குயில்பாட்டு' நூலை எழுதியவர் யார் _______________

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) வாணிதாசன் ஈ) புதுவை சிவம்

2. 'தமிழுக்கு அமுதென்று பேர்' எனப் பாடியவர் _______________

அ) பாரதிதாசன் ஆ) வாணிதாசன்
இ) கண்ணதாசன் ஈ) பிரபஞ்சன்

3. "பாரதிநாள் இன்றடா, பாட்டிசைத்து ஆடடா" எனப் பாடியவர் _______________

அ) பாரதிதாசன் ஆ) வாணிதாசன்
இ) கண்ணதாசன் ஈ) திருமுருகன்

4. பாட்டிசைத்து – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______________

அ) பாட்டு + இசைத்து ஆ) பாடல் + இசைத்து
இ) பா + இசைத்து ஈ) பாட + இசைத்து

5. மூன்று + தமிழ் – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _______________

அ) மூன்றுதமிழ் ஆ) முத்துத்தமிழ்
இ) முதுதமிழ் ஈ) முத்தமிழ்

**ஆ. பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாரதிதாசன் | – | கொடி முல்லை |
| 2. | தமிழ்ஒளி | – | பாஞ்சாலி சபதம் |
| 3. | பாரதியார் | – | பாவலர் பண்ணை |
| 4. | வாணிதாசன் | – | மாதவி காவியம் |
| 5. | திருமுருகன் | – | இருண்ட வீடு |

**இ. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பாரதியார் படைத்த முப்பெருங் காவியங்கள் யாவை?
2. பாரதிதாசன் – பெயர்க் காரணம் தருக.
3. பிரபஞ்சனுக்குச் சிறப்பைச் சேர்த்த நூல் எது?
4. பாவேந்தர் விருதைப் பெற்றவர்கள் யாவர்?
5. தமிழ்ஒளியின் படைப்புகளை எழுதுக.

**ஈ. சிந்தனை வினா**

தமிழின் வளர்ச்சிக்குக் கவிஞர்கள் எவ்வாறெல்லாம் தொண்டாற்றியுள்ளனர்?



5th_Tamil_Term 3.indd 47 7/22/2019 10:14:22 AM

துணைப்பாடம்

இயல் மூன்று

# நன்மையே நலம் தரும்

தமிழ்மணியின் வீட்டில் அழகிய தோட்டம் ஒன்று இருந்தது. வண்ண வண்ண மலர்களும் பயன் தரும் செடி, கொடிகளும் அங்கு நிறைந்திருந்தன. தோட்டத்தின் அருகிலேயே சில மரங்களும் இருந்தன. அதனால், அந்த இடத்தில் எப்போதும் குளிர்ச்சியும் தூய்மையான காற்றும் இருந்துகொண்டே இருக்கும்.

மாலைநேரத்தில், தமிழ்மணி அங்குள்ள மரக்கிளையில் ஊஞ்சல் கட்டி ஆடுவான். ஒருநாள், அங்கிருந்த ஒரு மரக்கிளையில் பறவையொன்றின் கூட்டைக் கண்டான். பெற்றோரிடம் இதுபற்றிக் கூறினான். அவன் தந்தை, "ஆமாம், தமிழ்மணி! நான் நேற்றே பார்த்துவிட்டேன். இரண்டோ மூன்றோ பறவைக் குஞ்சுகள் இருக்கின்றன. அவற்றின் கீச்…கீச்… ஒலியை நீயும்கூட கேட்கலாம்" என்றார்.

அப்பா, தாய்ப்பறவை இல்லாத நேரத்தில நான் அந்தப் பறவைக் குஞ்சுகளை எடுக்கட்டுமா" என்றான் தமிழ்மணி. உடனே அவன் அம்மா, நீ அப்படியெல்லாம் செய்யக்கூடாது. தாயிடமிருந்து பிரித்துவிட்டால், அவை மிகுந்த துன்பமடையும்" என்று






5th_Tamil_Term 3.indd 48 7/22/2019 10:14:25 AM

அறிவுறுத்தினாள். சரி, சரி என்று தலையாட்டிக்கொண்டே விளையாடச் சென்றான் அவன்.

தமிழ்மணிக்கு அன்று பிறந்தநாள். கொண்டாட்டத்துக்குச் சொல்லவா வேண்டும்? போன ஆண்டைவிட இந்த ஆண்டு, அவனுக்கு நண்பர் கூட்டம் அதிகரித்திருந்தது. தன் பெற்றோரிடம் தனக்கு என்னென்ன வேண்டும்? பிறந்த நாள் விழாவுக்கு எத்தனை நண்பர்கள் வருவார்கள்? என்றெல்லாம் அவன் முன்பே சொல்லி வைத்திருந்தான். அதனால், அவன் பெற்றோரும் விழாவுக்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

மாலை மூன்று மணியிலிருந்தே நண்பர்கள் தமிழ்மணியின் வீட்டுக்கு வரத் தொடங்கினர். தோட்டத்தைப் பார்த்ததும் அவர்களுக்குக் கட்டுக்கடங்கா மகிழ்ச்சி ஏற்பட்டது. சிலர் அங்கிருந்த பூக்களைப் பறித்துக் கீழே போட்டனர். சிலர், இலைகளைச் சுருட்டி அடுத்தவர் காதில் ஊதினர். ஊஞ்சலில் ஏறியும் இறங்கியும் சிலர் விளையாடினர். சிலர், மரத்திற்கு மரம் ஓடிப்பிடித்து விளையாடினர். தமிழ்மணியும் அவர்களோடு சேர்ந்து மகிழ்ச்சியாக ஆடிக்கொண்டிருந்தான்.

அச்சமயம், அவன் நண்பன் ரஷீத் மரத்தின் மேலிருந்த பறவைக்கூட்டைப் பார்த்தான். "எல்லாரும் இங்க பாருங்க, சின்னச் சின்னதாப் பறவைக்குஞ்சுகள் இருக்கும்போல, கீச்...கீச்னு சத்தம் கேட்குது" என்றான் ரஷீத். அங்கங்கே விளையாடிக் கொண்டிருந்த நண்பர்கள் எல்லாம் பறவைக்கூடு இருந்த மரத்தினருகே ஒன்றுகூடினார்கள்.





5th_Tamil_Term 3.indd 49 7/22/2019 10:14:25 AM

அப்போது, யாரும் எதிர்பாரா வகையில் மற்றொரு நண்பன், பீட்டர் திடீரென அந்தக் கூட்டின் மீது கல்லெறிந்தான். நல்லவேளை! அவன் எறிந்த கல், கிளையில் பட்டு, அருகிலிருந்த பூந்தொட்டியின் மீது விழுந்தது. இதைப் பார்த்ததும், தமிழ்மணிக்குச் சினம் பொங்கியது.

"பீட்டர், ஏன் இப்படி செய்தாய்? அந்தப் பறவைக் குஞ்சுகள் பாவம் இல்லையா? நீ எறிந்த கல் அந்தச் சின்னஞ்சிறிய பறவைக் குஞ்சுகளின்மேல் பட்டிருந்தால் என்னவாயிருக்கும்? உன் வீட்டை யாராவது இடித்துத் தள்ளினால், நீயும் உன் குடும்பத்தாரும் என்ன செய்வீர்கள்? அதுபோன்றுதானே அந்தப் பறவைகளின் நிலையும். இதை ஏன் நீ புரிந்து கொள்ளவில்லை" என்று படபடவெனப் பேசினான் தமிழ்மணி.

தன்னுடைய இழிவான செயலை நினைத்த பீட்டர், என்ன சொல்வதென்று தெரியாமல் தலைகுனிந்து நின்றான். "தமிழ், என்னை மன்னித்துவிடுடா, நான் அறியாமல் செய்த தவற்றை எண்ணி வருந்துகிறேன். இனி எப்போதும் இதுபோன்ற தவறுகளைச் செய்ய மாட்டேன்" என்று வருத்தத்துடன் கூறினான் பீட்டர். அவன் கூறியதைக் கேட்ட மற்ற நண்பர்கள், "அவன்தான் தவற்றை ஒப்புக்கொண்டானே, மன்னித்துவிடுடா, அவன் மட்டும் இல்லே நாங்களும் இதுபோன்று தவறு செய்யமாட்டோம்" என்று கூறினர்.

அப்போது அங்கு வந்த தமிழ்மணியின் பெற்றோர் நடந்ததை அறிந்துகொண்டனர். "நம்மைப்போலத்தான் இவ்வுலகில் எல்லா உயிர்களும் வாழ்கின்றன. அவற்றிடம் நாம் அன்புகாட்ட வேண்டும். மற்ற உயிர்களுக்குச் செய்யும் தீங்கு, நமக்கு நேர்ந்தது போன்று உணர வேண்டும். நமக்கு வலித்தால் அவற்றிற்கும் வலிக்கும் அல்லவா" என்றார் தமிழ்மணியின் தந்தை.

அவர் கூறியதைப் புரிந்துகொண்ட தமிழ்மணியும் நண்பர்களும் "இனி நாங்கள் யாரையும் துன்புறுத்த மாட்டோம்" என்று உறுதி கூறினர். தாங்கள் கூறியதை மெய்ப்பிப்பதுபோல், கொண்டு வந்த தின்பண்டங்களையும் சிறுதானியங்களையும் பறவைகளுக்குக் கொடுத்தனர்.

மேலும், தாம் பார்க்கும் இடங்களிலும் பள்ளியிலும் பறவைகளின் கூடுகளைக் கண்டால், அவற்றைக் கலைக்காமல் பாதுகாப்போம் என்று உறுதி பூண்டனர்.

பறவைகளுக்குத் தானியங்களும் தண்ணீரும் கொடுத்து உதவுவோம் என்று கூறி உறுதி அளித்தனர். **பிறர்க்கு உதவுவதே சிறந்த பிறந்த நாள் பரிசு** என்று கூறித் தமிழ்மணியை அனைவரும் வாழ்த்திச் சென்றனர்.

## கற்பவை கற்றபின்

- இக்கதையை உம் சொந்த நடையில் கூறுக.
- நீங்கள் விலங்குகளிடம் அன்புகாட்டிய நிகழ்வொன்றை அனைவருக்கும் கூறுக.

## மதிப்பீடு

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பறவைக் குஞ்சுகளை எடுக்க நினைத்த தமிழ்மணிக்குத் தாய்கூறிய அறிவுரை யாது?
2. தமிழ்மணியின் பிறந்தநாள் விழாவில், பீட்டர் செய்த செயல் யாது?
3. பீட்டரின் செயலைக் கண்ட தமிழ்மணி என்ன கூறினான்?
4. உயிர்களிடத்து அன்பு காட்டுவது குறித்துத் தமிழ்மணியின் தந்தை என்ன கூறினார்?

**சிந்தனை வினா**

நீங்கள் செல்லும் வழியில் நாய்க்குட்டியொன்று நடக்க முடியாமல் துன்பப்படுகிறது. அதற்கு நீங்கள் எப்படி உதவுவீர்கள்?

# கற்கண்டு

## மரபுத்தொடர்கள்

**முருகன்** அடடே, கபிலா, நீயா? என்னப்பா, இப்பத்தான் வழி தெரிந்ததா? இவ்வளவு நாளாக எங்கே இருந்தாய்?

**கபிலன்** அட, அதை ஏங்க கேட்கிறீங்க? உங்க பேச்சையெல்லாம் கேட்காம, கிடைத்த நல்ல வேலைய விட்டுவிட்டு வெளியூருக்குப் போனேன். அந்த வேலையத் **தலைல வைத்துக் கொண்டாடினேன்**. ஆனால், **கானல் நீரை** உண்மையென்று நம்பிவிட்டேன். நான் செய்த **இமாலயத் தவறு** இதுதான். எப்பத்தான் **கரையேறுவேனோ** தெரியல. நம்ம ஊர்லய வேலை கிடைக்குமான்னு இப்ப **பஞ்சாகப் பறந்துகிட்டிருக்கேன்**.

**முருகன்** என்னாச்சு? ஏன் இப்படிப் பேசுகிறாய்?

**கபிலன்** வேறென்ன? **அவசரக்குடுக்கையா** இருந்ததாலே **ஆகாயத்தாமரையை** உண்மைன்னு நினைச்சேன். இப்ப வருத்தப்படுகிறேன். நல்ல ஊதியம் கிடைக்கும்னு பார்த்தா ஒரே **பித்தலாட்டமா** இருக்கு.

**முருகன்** சரி, சரி, வருத்தப்படாதே. நீ எங்கேயும் போகவேண்டா. நானே உனக்கு வேலை வாங்கித் தருகிறேன்.

உரையாடலைப் படித்தீர்களா? கபிலன் என்ன பேசினான் என்று புரிந்து கொண்டீர்களா? அவன் தன் பேச்சில் மரபுத்தொடர்களைப் பயன்படுத்தியிருக்கிறான். அவை, உங்களுக்குப்புரியவில்லையெனில், அவற்றின் பொருளை முதலில் காண்போம். பின்னர், மீண்டும் அவன் பேசியதைப் படித்துப் பார்ப்போம்.



5th_Tamil_Term 3.indd 51 7/22/2019 10:14:26 AM

| மரபுத்தொடர் | உணர்த்தும் பொருள் |
|---|---|
| தலையில் வைத்துக் கொண்டாடுதல் | பெரிதும் மதித்தல் |
| கானல் நீர் | கிடைக்காத ஒன்று |
| இமாலயத்தவறு | பெரிய தவறு |
| கரையேறுதல் | துன்பத்திலிருந்து மீளுதல் |
| பஞ்சாகப் பறத்தல் | அலைந்து திரிதல் |
| அவசரக்குடுக்கை | ஆராயாமல் செயல்படுதல் |
| ஆகாயத்தாமரை | இல்லாத ஒன்று |
| பித்தலாட்டம் | ஏமாற்று வேலை |

இப்போது, மீண்டும் படித்துப் பார்த்தீர்களா? அவன் கூறியதன் பொருள் புரிந்துவிட்டதல்லவா! இவ்வாறு, நம் பேச்சில் இயல்பாகப் பயன்படுத்தும் சொற்கள் பலவற்றை முன்பே நாம் அறிந்துள்ளோம். இணைமொழிகள் போன்று கருத்தாழமும் நடையழகும் கொண்டவை மரபுத்தொடர்கள். இவை **மரபாகத் தொன்றுதொட்டு வழக்கில் பயன்படுத்தப்பட்டு வருவதால், மரபுத்தொடர்கள் என்கிறோம்.**

## கற்பவை கற்றபின்

- மரபுத்தொடர்களின் பொருளை அறிந்துகொள்ள முயல்க.
- அன்றாட வாழ்வில் நம்மைச் சுற்றியுள்ளவர்களின் பேச்சில் காணப்படும் மரபுத்தொடர்களைத் தொகுத்து வருக.
- மரபுத்தொடர்களைப் பயன்படுத்தித் தொடர்கள் எழுதுக.

## மதிப்பீடு

# படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

**அ. கீழ்க்காணும் தொடர்களில் ஏற்ற மரபுத்தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. நாங்கள்----------------உழவுத்தொழில் செய்து வருகிறோம்.
(வாழையடி வாழையாக/ விடிவெள்ளியாக)

2. அவனுக்கு நடைமுறை அறிவு எதுவும்கிடையாது. அவன் ஒரு--------
(அவசரக்குடுக்கை/புத்தகப்பூச்சி)

3. பாரதிதாசன் கவிதை உலகில்----------ப்பறந்தார்.
(பற்றுக்கோடாக/ கொடி கட்டி)



5th_Tamil_Term 3.indd 52 7/22/2019 10:14:26 AM

**ஆ. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | கயிறு திரித்தல் | – | பொய் அழுகை |
| 2. | ஓலை கிழிந்தது | – | விடாப்பிடி |
| 3. | முதலைக் கண்ணீர் | – | இல்லாததைச் சொல்லல் |
| 4. | குரங்குப்பிடி | – | மறைந்து போதல் |
| 5. | நீர் மேல் எழுத்து | – | வேலை போய்விட்டது |

**இ. 'காலை வாரிவிடுகிறது' – இம்மரபுத்தொடர், கீழ்க்காணும் எந்தத்தொடருக்குப் பொருத்தமாக அமையும்?**

1. காலம் பொன் போன்றது. இருந்தாலும் நம்மைக்––––––––––––––––––––––.
2. காலை எழுந்தவுடன் தூக்கம், நம்மைக்––––––––––––––––––––––.
3. மறதி நம்மை அடிக்கடி ––––––––––––––––––––––.
4. இளமைக்காலம் நம்மை அடிக்கடி––––––––––––––––––––––.

**ஈ. மலையேறி விட்டது – இம்மரபுத்தொடர் குறிக்கும் பொருளைத் தேர்ந்தெடுக்க.**

1. மாயச்செயல் 2. கதை விடுதல்

3. மாற்றம் பெறுதல் 4. பயனில்லாது இருத்தல்

**உ. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. மரபுத்தொடர் என்றால் என்ன? ஓர் எடுத்துக்காட்டு தருக.
2. பின்வரும் மரபுத்தொடர்களைக்கொண்டு தொடரமைத்து எழுதுக.

அ) தோலிருக்கச் சுளை விழுங்கி ஆ) மதில் மேல் பூனை

## மொழியை ஆள்வோம்

**அ. கேட்டல்**

- அன்புடைமை அதிகாரத்திலுள்ள குறட்பாக்களின் பொருளைக் கேட்டறிக.
- மனிதநேயத்தை உணர்த்தும் கதைகளைக் கேட்டு அறிக.



5th_Tamil_Term 3.indd 53 7/22/2019 10:14:26 AM

### ஆ. பேசுதல்

- உனது வாழ்வின் உயர்வுக்கு எந்தெந்தப் பண்புகள் உதவியாக இருக்கும்? கலந்துரையாடுக.
- அன்னை தெரேசாவின் தொண்டுகளைப் பற்றி 5 மணித்துளி பேசுக.

### இ. படித்தல்

- அண்ணல் காந்தியடிகள், அன்னை தெரேசா ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படித்து அறிக.
- நீங்கள் செய்தித்தாளில் படித்த மனிதநேயச் செயலொன்றை வகுப்பில் கூறுக.

### ஈ. எழுதுதல்

**1. சொல்லக் கேட்டு எழுதுக.**

1. பெண்ணின் பெருமையைப் பாடியவர் பாரதிதாசன்.
2. பாரதிதாசன் பெயரால் விருது வழங்கப்படுகிறது.
3. கவிஞர் வாணிதாசன் புதுச்சேரியைச் சேர்ந்தவர்.
4. வானம் வசப்படும் என்ற நூலை எழுதியவர், பிரபஞ்சன்.

**2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. பொறுமை __________
2. நூல்கள் __________
3. தமிழ்மொழி __________
4. அன்பு __________
5. கவிஞர் __________

**3. பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாரதியார் | – | என் தமிழ் இயக்கம் |
| 2. | பாரதிதாசன் | – | கொடி முல்லை |
| 3. | வாணிதாசன் | – | குயில் பாட்டு |
| 4. | திருமுருகன் | – | வானம் வசப்படும் |
| 5. | பிரபஞ்சன் | – | தமிழியக்கம் |

## 4. அண்ணல் காந்தியடிகளின் உள்ளம் கவர்ந்த குஜராத்திய பாடலின் தமிழாக்கம்

**தீமை செய்தவர்க்கும் நன்மை செய், எல்லாரும் ஒன்று என்பதைக் கூறும் மனிதநேயப் பாடலைப் படித்து உணர்க.**

உண்ணும் நீர் தந்த ஒருவனுக்குக் கைம்மாறாய்
விண்ணமுதைப்போல் அன்னம் விரும்பிப் படைத்திடுவாய்!
அன்போடு கும்பிட்டால் அடிபணிந்து நீ தொழுவாய்!
செம்பான காசுக்குச் செம்பொன்னைத் தந்திடுவாய்!
உயிர்காத்தோன் துன்பத்தை உயிர்கொடுத்து நீ துடைப்பாய்!
செயலாலும் சொல்லாலும் சிந்தையினாலும் பெரியோர்
சின்னஞ்சிறு உதவி செய்தவர்க்கு எந்நாளும்
ஒன்றுக்குப் பத்தாய் உவந்து செய்வர் பேருதவி!
வையத்தார் எல்லாரும் ஒன்றெனவே மாண்புடையோர்
ஐயப்பாடின்றி அறிந்திருக்கும் காரணத்தால்
இன்னா செய்தாரை ஒறுக்க அவர் நாண
நன்னயம்செய்துவிடுவர் இந்த நானிலத்தே!

## 5. பிறமொழிச் சொற்கள் கலவாமல் எழுதுக.

அழகன், பிரெண்ட்ஸோடு கிரவுண்டுக்குச் சென்றான். அங்கு அனைவருடனும் ஜாலியாகக் கிரிக்கெட் விளையாடினான். அதனால், அவன் மிகவும் டையர்டாக இருந்தான்.

## 6. பாடலை நிறைவு செய்க.

1) அம்மா இங்கே வந்தாங்க!
அன்பாய் இருக்கச் சொன்னாங்க!
நானும் அதைக் கேட்பேன்
அதன் படியே நடப்பேன்

2) __________ இங்கே வந்தாங்க!
__________ இருக்கச் சொன்னாங்க!
நானும் அதைக் கேட்பேன்
அதன்படியே நடப்பேன்

3) ________________________
________________________
________________________
________________________

4) ________________________
________________________
________________________
________________________




5th_Tamil_Term 3.indd 55 7/22/2019 10:14:26 AM

7. பின்வரும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

# கபடி விளையாட்டு மன்றம்

## அனைத்துப் பள்ளி மாணவ, மாணவியருக்கும் ஒரு நற்செய்தி




**இடம்:** அண்ணா விளையாட்டு மைதானம், சென்னை.

**காலம்:** மாணவர் – காலை 9 மணிமுதல் 11 மணிவரை
மாணவியர் – காலை 11 மணிமுதல் 12 மணிவரை

### வினாக்கள்

1. நீங்கள் மேலே படித்தது என்ன?
   அ) பாடல் ஆ) கதை இ) விளம்பரம்
2. பயிற்சி அளிக்கப்படும் விளையாட்டு எது?
   அ) மட்டைப்பந்து ஆ) கபடி இ) சதுரங்கம்
3. மாணவர்களுக்கு எத்தனை மணி நேரம் பயிற்சி வழங்கப்படுகிறது?
   அ) 1 மணி ஆ) 2 மணி இ) 3 மணி
4. மைதானம் – இந்தச்சொல்லுக்குரிய பொருள் எது?
   அ) பூங்கா ஆ) அரங்கம் இ) திடல்
5. விளம்பரத்திலிருந்து நீங்கள் புரிந்து கொண்டது என்ன?
   அ) கபடி விளையாட்டுப் பயிற்சி இலவசமாகக் கற்றுத் தரப்படுகிறது.
   ஆ) கபடி விளையாட்டில் மாணவர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.
   இ) கபடி விளையாட்டு நடைபெறுமிடம் பெரியார் விளையாட்டு மைதானம்.



5th_Tamil_Term 3.indd 56 7/22/2019 10:14:26 AM

# மொழியோடு விளையாடு

## 1. குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நா | பா | ர | தி | யா | ர் |
| வ | ட | மி | து | ரு | வி |
| அ | ல் | க | ன | வு | ழா |
| ன் | நூ | கு | ம் | ழி | மொ |
| பு | றா | லை | த | டு | வி |

### இடமிருந்து வலம்

1. இவர் எட்டயபுரத்துக் கவிஞர்
2. இது வெண்ணிறப் பறவை
3. தூக்கத்தில் வருவது

### கீழிருந்து மேல்

1. புத்தகத்தைக் குறிக்கும் சொல்

### வலமிருந்து இடம்

1. பாராட்டி வழங்கப்படுவது
2. மக்கள் பேசுவதற்கு உதவுவது
3. சுதந்திரத்தைக் குறிக்கும் தமிழ்ச்சொல்

### குறுக்கும் நெடுக்குமாக

1. முத்தமிழுள் ஒன்று



5th_Tamil_Term 3.indd 57 7/22/2019 10:14:26 AM

## 2. குறிப்புகள் கொண்டு விடை எழுதுக

1. தலைகீழாய் என் வீடு ____________________________
2. என் பார்வை கூர்நோக்கு ____________________________
3. நானும் ஒரு தையல்காரி ____________________________
4. வருமீன் வரும்வரை காத்திருப்பேன் ________________________
5. எனக்கு வீடு கட்டத் தெரியாது. ____________________________







## 3. சொல்லிருந்து புதிய சொல்

பாரதியார் _________ _________ _________ _________

மணிக்கொடி _________ _________ _________ _________

பாவேந்தர் _________ _________ _________ _________

நாடகம் _________ _________ _________ _________

விடுதலை _________ _________ _________ _________

## 4. சொற்களைக் கொண்டு புதிய தொடர் உருவாக்குக.

(எ.கா.) உண்மை  நாம் எப்பொழுதும் உண்மையே பேசவேண்டும்

1. பெருமை ___________________________________
2. பாடல் ___________________________________
3. நாடகம் ___________________________________
4. தோட்டம் ___________________________________
5. பரிசு ___________________________________

## 5. முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடரமைக்க.

1. பெருமை பாரதிதாசன் தமிழுக்குச் சேர்த்துள்ளார்.

   பாரதிதாசன் தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

2. பறவை அழகான புறா ___________________________________



5th_Tamil_Term 3.indd 58 7/22/2019 10:14:27 AM

3. தமிழ் உண்டாகிறது மேல் ஆர்வம்

________________________________

4. போற்றும் உலகம் எழுத்தாளர் உயர்ந்த

________________________________

## அறிந்து கொள்வோம்

### மனிதநேயம்



அன்பென்று கொட்டு முரசே – மக்கள்
மக்கள் அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும் – இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

## நிற்க அதற்குத் தக







- உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவேன்
- நல்ல நல்ல நூல்களைத் தேடிப் படிப்பேன்
- மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பேன்

## செயல் திட்டம்

- தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய கவிஞர்களுள் ஐவரின் படத்தை ஒட்டி, ஒவ்வொருவரையும் பற்றி 5 வரிகள் எழுதி வருக.





5th_Tamil_Term 3.indd 59 7/22/2019 10:14:27 AM

# அகரமுதலி

| | | | |
|---|---|---|---|
| 1 | அநியாயம் | – | நேர்மையின்மை |
| 2 | ஆணை | – | கட்டளை |
| 3 | இரவல் | – | கடன் |
| 4 | ஊழ்வினைப் பயன் | – | விதிப்பயன் |
| 5 | கஞ்சத்தனம் | – | பிறர்க்குக் கொடுக்க மனமில்லாத |
| 6 | கட்டுக்கடங்கா | – | அளவில்லாத |
| 7 | களிறு | – | ஆண் யானை |
| 8 | கும்பிடு | – | வணங்கிடு |
| 9 | குன்றாப் புகழ் | – | குறையாத புகழ் |
| 10 | கொடைப்பண்பு | – | வள்ளல் தன்மை |
| 11 | கைம்மாறு | – | பதிலுதவி |
| 12 | சன்மானம் | – | வெகுமதி |
| 13 | சிந்தை | – | எண்ணம் |
| 14 | தகனம் | – | எரியூட்டுதல் |
| 15 | தண்டித்தல் | – | ஒறுத்தல் |
| 16 | தண்டோரா | – | முரசறைந்து அறிவித்தல் |
| 17 | தரணி | – | உலகம் |
| 18 | துயர் | – | துன்பம் |
| 19 | நங்கை | – | பெண் |
| 20 | நல்குதல் | – | வழங்குதல் |
| 21 | நாணயம் | – | நேர்மை |
| 22 | நானிலம் | – | உலகம் |
| 23 | நீடூழி | – | நெடுநாள் |
| 24 | பரிவு | – | அன்பு |
| 25 | பற்று | – | விருப்பம் |
| 26 | பார் | – | உலகம் |
| 27 | பேழை | – | பெட்டி |
| 28 | மரியாதை | – | மதிப்பு |
| 29 | மாண்பு | – | பெருமை |
| 30 | மாரி | – | மழை |
| 31 | மேனி | – | உடல் |
| 32 | வன்மை | – | வலிமை |
| 33 | விண்ணமுதம் | – | மழைநீர் |
| 34 | விருது | – | பட்டம் |
| 35 | வையத்தார் | – | உலகத்தார் |



5th_Tamil_Term 3.indd 60 7/22/2019 10:14:27 AM

# கற்றல் விளைவுகள்

| கேட்டல் | பேசுதல் | படித்தல் | எழுதுதல் |
|---|---|---|---|
| • விழிப்புணர்வுப் பாடல்கள், சிந்தனையைத் தூண்டும் கதைகளைக் கேட்டுப்புரிந்து கொள்வர்.<br>• சொற்போர், கலந்துரையாடல் ஆகியவற்றைக் கேட்டுப்புரிந்து கொள்வர்.<br>• எளிய செயல் திட்டங்களைக் கேட்டுப் புரிந்து செயல்படுவர்.<br>• பல்வேறு பாடல்களைப் பொருளுணர்ந்து பாடுவர்.<br>• அறிந்த, எளிய தலைப்புகளில் இயல்பாகவும் சரளமாகவும் பேசுவர். | • கேட்ட, படித்த பகுதியின் மையக்கருத்தினைக் கூறுவர்.<br>• கேட்ட, படித்த பல்வேறு இலக்கியங்கள்பற்றிப் பேசுதல், விவாதித்தல், பகுப்பாய்வு செய்வர்.<br>• தம்மைச்சுற்றி நிகழும் பல்வேறு நிகழ்வுகளுக்கு எதிர்வினை புரிவர்.<br>• சூழ்நிலைகளையும் நிகழ்வுகளையும் விவரிப்பர்.<br>• படித்த, கேட்ட கருத்துகள் பற்றிக் கருத்தாடல் செய்யவும் வினாக்கள் எழுப்பவும் தம் கருத்துக்கு/ நோக்கத்திற்கு ஆதரவாகவும் விளக்கமளிப்பர்.<br>• நாடகங்கள், சொற்போர் முதலான நிகழ்வுகளில் பங்கேற்றுப் பேசுவர்.<br>• மொழியின் நுட்பமான கூறுகளை மனத்திற்கொண்டு தங்களுக்கேயுரிய மொழிநடையைக் கட்டமைப்பர். | • செய்தி, நிகழ்ச்சி அறிவிப்புகள், நிகழ்ச்சிநிரல், அழைப்பிதழ்கள், துண்டறிக்கை/ வெளியீடுகள் ஆகியவற்றைப் படித்துப் பொருளுணர்வர்.<br>• கதை, உரையாடல், நாடகம், கடிதம் ஆகியவற்றை உரிய உணர்ச்சியுடனும், குரல் ஏற்றஇறக்கத்துடனும் பொருள் விளங்குமாறு படிப்பர்.<br>• உரைப்பகுதிகளைப் படித்து அதிலிருந்து கேட்கப்படும் பல்வேறு வகையான வினாக்களுக்கு விடையளிப்பர்.<br>• எளிய பட விளக்கங்கள், எண் விவர அறிவிப்புகள், வரைபடங்கள் ஆகியவற்றைப் படித்து, பொருள் உணர்வர்.<br>• சொற்களின் பொருண்மையை அகரமுதலிகளில் கண்டறிவர்.<br>• செய்தித்தாள்கள், கதை நூல்கள் ஆகியவற்றைப் படிப்பர்.<br>• .பல்வேறு துறை சார்ந்த சொற்களைப் புரிந்துகொண்டு பொருத்தமான இடங்களில் பயன்படுத்துவர். | • உரைநடை / துணைப்பாடங்களில் இடம்பெறும் இன்றியமையாச் சிக்கல்களை எழுத்துவடிவில் வெளிப்படுத்துவர்.<br>• உரை/ உரைப்பகுதியைச்/ சொல்லக் கேட்டு உரிய நிறுத்தக்குறிகளுடன் எழுதுவர்.<br>• செய்யுள், பாடல்களை அடிபிறழாமல் எழுதுவர்.<br>• சுற்றுப்புறத்தில் நடக்கும் நிகழ்வுகளை உற்று நோக்கி, அவைசார்ந்த தமது கருத்துகளை எழுத்தில் பதிவு செய்வர்.<br>• நாட்குறிப்பு எழுதுதல்<br>• நிகழ்வுகளை விவரித்து எழுதுதல்.<br>• பல்வேறு சூழல்களுக்கேற்ப எழுதும்போது, மொழியின் இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு, பொருத்தமான சொற்கள், தொடர்கள், பழமொழிகள், நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தி, கவனமாக எழுதுவர்.<br>• கற்பனையின் அடிப்படையில் கதைகள், பாடல்கள், கவிதைகள், கடிதங்கள் எழுதுவர்.<br>• விண்ணப்பக் கடிதம் எழுதுவர்.<br>• குறிப்புச் சட்டகத்தைப் பயன்படுத்தி, கட்டுரை எழுதுவர். |



5th_Tamil_Term 3.indd 61 7/22/2019 10:14:27 AM

| நடைமுறை இலக்கணமறிதல் | கற்கக் கற்றல் | சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறனும் |
|---|---|---|
| • சொற்றொடர் அமைப்புமுறை (எழுவாய், செயப்படுபொருள், பயனிலை) அறிவர்.<br>• மூவிடம் அறிதல் (தன்மை, முன்னிலை, படர்க்கை )<br>• உரிய இணைப்புச் சொற்களைப் பொருத்தமான இடங்களில் சேர்த்து எழுதுவர். (ஏனெனில், அப்படியானால், அப்படியில்லாவிட்டால்) | • எளிய அகரமுதலியைப் பயன்படுத்துவர்.<br>• செய்தித்தாள்கள், கதை நூல்கள் படிப்பர்.<br>• கணினியைப் பயன்படுத்தி நாடகங்கள், சொற்போர், உரைகள், கேட்பர்.<br>• இணையத்தில் தேடிப் படிப்பர். | • கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்<br>• பழமொழிகள், மரபுத் தொடர்கள்<br>• நேரிணை (உயர்ந்தோங்கிய) எதிரிணைச் (ஏற்ற இறக்கம்) சொற்களைப் பயன்படுத்துதல்<br>• பிற நாடுகள், உலகத் தலைவர்கள், இன்றியமையா இடங்களின் பெயர்கள்<br>• ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள்<br>• பலதுறை சார்ந்த கலைச் சொற்கள்<br>• அறிவியல் கலைச் சொற்கள்<br>• சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காகப் படித்தல்<br>• சிறுவர்களுக்கான இலக்கியங்கள் |
| **படைப்புத் திறன்கள்** | **விழுமியங்களை உணர்ந்தறிந்து பின்பற்றுவர்** | **வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுத்துவர்** |
| • குறிப்புகளைக் கொண்டு கதைகளை உருவாக்குவர்.<br>• பாதிக்கதையைத் தொடர்ந்து மீதிக் கதையைக் கூறி முடிப்பர்.<br>• பாடல் அடிகளை நீட்டிக் கொண்டே செல்வர்.<br>• நிகழ்ச்சியைச் செய்தியாக்குவர்.<br>• தலைப்புச் செய்தியை விரித்து எழுதுவர்.<br>• விளம்பரங்கள், அறிவிப்புகள், முழக்கத் தொடர்கள் உருவாக்குவர்.<br>• குறிப்பிட்ட தலைப்பில் கதை, கவிதை, உரை எழுதித் தயாரித்தல்/ படித்துக்காட்டுவர். | • காலம் தவிர்க்காமை<br>• விதிகளைப் பின்பற்றுதல்<br>• தூய்மை பேணுதல்<br>• பொருள்களைப் பாதுகாத்தல்<br>• பிறர்க்கு உதவுதல்<br>• பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>• கூட்டுணர்வு<br>• நட்புணர்வு<br>• உண்மை பேசுதல்<br>• சேமிப்பு உணர்வு<br>• சிக்கனம்<br>• நேர்மை<br>• நன்றியுணர்வு<br>• தன்னம்பிக்கை<br>• ஒற்றுமை<br>• விட்டுக் கொடுத்தல்<br>• நாட்டுப்பற்று<br>• விடாமுயற்சி<br>• மொழிப்பற்று<br>• உழைப்பு<br>• அறிவியல் மனப்பான்மை<br>• இயற்கையை நேசித்தல்<br>• சகோதரத்துவம் | • தன்னை அறியும் திறன்<br>• சிக்கல் தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்புத் திறன்<br>• இணக்கமான உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன் |

## தமிழ் – ஐந்தாம் வகுப்பு
## ஆக்கம்

### கல்வி ஆலோசகர்

**முனைவர். பொன். குமார்**
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

### மேலாய்வாளர்கள்

**திருமதி ஆ.சே.பத்மாவதி**,எழுத்தாளர், சென்னை.

**திருமதி பா. மலர்விழி**, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.

**திரு சி. பன்னீர்செல்வம்**,
கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
ஒருங்கிணைந்த கல்வி, புதுக்கோட்டை மாவட்டம்.

**திரு இல. சீனிவாசன்**, முதுகலை ஆசிரியர்,
மஜ்ஹருல் உலூம் மேனிலைப்பள்ளி,
ஆம்பூர், வேலூர் மாவட்டம்.

### ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர். கா.சா. மொழியரசி**, முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர்.

**திரு ந. இராமலிங்கம்**, உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

**தே.விமலா தேவி**, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

### கலை மற்றும் வடிவமைப்புக்குழு

#### பக்க வடிவமைப்பு

சந்தோஷ்குமார் சக்திவேல்

#### வரைபடம்

**கா. தனஸ் தீபக் ராஜன்**
**கா. நலன் நான்சி ராஜன்**
**வை.மை.பிராங்க் டஃப்**
**மதன் கங்காதரன்**
**ரா. ஷாலினி**

#### தரக்கட்டுப்பாடு

**ராஜேஷ் தங்கப்பன்**
**கி. ஜெரால்டு வில்சன், அருண் காமராஜ்**
**காமாட்சிபாலன் ஆறுமுகம்**

#### வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்

**ரமேஷ் முனிசாமி**

### பாடநூல் உருவாக்கக் குழு

**திருமதி அர. அனுசுயா தேவி,** இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, சாலையம்பாளையம்,
கோலியனூர் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

**திருமதி பெ. முருகராணி**, இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, மருவத்தூர்,
வேப்பூர் ஒன்றியம், பெரம்பலூர் மாவட்டம்.

**திருமதி க. மல்லிகா**, தலைமை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, அயன்புத்தூர்,
திருவெறும்பூர், திருச்சி மாவட்டம்

**திரு. பா.ச. குப்பன்**, இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, அய்யன்தாங்கல்,
காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

**திரு. ஆ. மாணிக்கம்**, இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, ஆலங்குடி,
அறந்தாங்கி ஒன்றியம், புதுக்கோட்டை.

**திருமதி. ந. பரிமளா**, தலைமைஆசிரியர்,
அம்பத்தூர் நகராட்சித் தொடக்கப் பள்ளி, வரதராஜபுரம்,
வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்

**திரு. வெ. ராஜா**, இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. ந.நி. பள்ளி இராக்கியாம்பட்டி,
கொங்கணாபுரம், சேலம்.

**திரு. கு. மனத்துணைநாதன்**, இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, கீழ்வேளூர்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

**திரு. பெ. கார்த்திகேயன்**, இடைநிலை ஆசிரியர்
ஊ. ஒ. தொ. பள்ளி, சிங்கிலியன் கோம்பை,
நாமகிரிப் பேட்டை ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்

**திரு ப சக்திவேல்**, இடைநிலை ஆசிரியர்
ஊ. ஒ. தொ. பள்ளி, பூங்குளம்பட்டி,
கொல்லிமலை ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்.

**திரு. மு. ராஜா**, வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர்
திருவாலங்காடு ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

### விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

**இரா. ஜெகநாதன்**, இ.நி.ஆ, ஊ.ஒ.ந.நி.பள்ளி,
கணேசபுரம், போளூர், திருவண்ணாமலை.

**ஆ.தேவி ஜெஸிந்தா**, ப.ஆ, அ.உ.நி.பள்ளி,
என்.எம்.கோவில், வேலூர்

**வ. பத்மாவதி**, ப.ஆ, அ.உ.நி. பள்ளி,
வெற்றியூர், திருமானூர், அரியலூர்.

#### அட்டை வடிவமைப்பு

**கதிர் ஆறுமுகம்**



5th_Tamil_Term 3.indd 63 7/22/2019 10:14:28 AM

# ENGLISH

## STANDARD FIVE

## TERM - 3





Preface.indd 65 11/14/2019 1:37:58 PM

# Preface

The English Language textbook has been designed to enable a fun-filled and engaging experience in learning the language. The approach allows for plenty of practice in the four language skills. It focuses on structure practice and vocabulary enrichment through a variety of language learning activities. These activities evoke interest and engaged practice in the language and thus lead to retention.

As per NCF 2005, language is learnt when it is taught with exposure in meaningful context rather than as a subject. In accordance with this, the textbook has been drafted with themes related or familiar to children. The units provide space for effective individual and pair work and thus allows the teacher to focus on time management in multi-level classrooms.

## How to use the textbook




- The first term English Book for Standard V has three units.
- Each unit is planned for a month.
- Nila introduces the theme of each unit.
- Each unit is designed with the concepts important to children like wisdom, humanity and social responsibilities.
- My little pictionary provides the exposure to dictionary in an attractive way.










- Let us learn is the teacher led prose and helps children learn vocabulary and values with the help of the context set in each of the story.
- Let us build provides scope for learning vocabulary with associated grammar concepts. The section is followed by exercises to help children practise.
- Let us know provides scope for teaching grammar in a context. The section helps children to learn grammar concepts inductively.

- Let us listen develops the listening skill of children by following instructions and acting accordingly. Listening passages has been given at the end of the third unit.
- Let us speak provides opportunity for the teachers to teach the language structures through games and activities. It develops listening and speaking skills.
- Let us sing provides opportunity for the children to sing rhymes with actions and intonation. It helps children learn new vocabulary contextually.








- Brainy box kindles children's divergent and convergent thinking ability.
- Let us read is a supplementary lesson that helps children learn vocabulary and values with the help of stories.
- Let us read aloud develops reading habit in children by familiarising them with short, interesting stories.
- Let us write builds writing skill in children.




## Unit 1— Always Learn

- Children should learn to get in to the habit of continuous learning in their early life. This lesson focuses on the importance of Intelligence.
- In the lesson "Five detectives" we learn how the five children used their intelligence to solve a mystery.
- The poem "Why" insists and shows children that being curious about the world around them and helps improve their intelligence.
- The story "The Witty Sparrow" tells about intelligent woman sparrow protects its home and life.


LET US LEARN

FIVE DETECTIVES


LET US READ


The New Start

## Unit 2— We are one

- Children should learn to everyone equally. This unit is built on the concept of humanity
- The lesson 'The Cracked coffee cup' focuses on treating all the people equally.
- The poem 'The dreamer' dreams of an unified world.
- The story 'The new start' tells about the boy Tenzin reflection when he is forced to move to a new country.

## Unit 3— My duties

- Children should learn to take care of public goods around them.
- The story 'The monster tree' tells about how people affect the environment they live in
- The poem 'Social responsibility' shows children and the simple activity that they can do to care for public places.
- The story 'The case of missing water' follows Divya and search for water in our village.


LET US LEARN

The Monster Tree


Learning Outcome

## Learning outcomes

- It is a moment of pride for children as they colour the balloons.
- This self-assessment tool helps boost their self -confidence.
- It is also a diagnostic page for the teacher to ensure that each student has attained the expected learning outcome in each unit.

## Lets use the QR code in the textbook ! How?

- Download the QR code scanner from the Google PlayStore/ Apple App Store into your smartphone.
- Open the QR code scanner application.
- Once the scanner button in the application is clicked, camera opens and then bring it closer to the QR code in the text book.
- Once the camera detects the QR code, a url appears in the screen. Click the url and go to the content page.

QR GUIDE



Preface.indd 67 11/14/2019 1:38:01 PM

# CONTENTS


| Unit & Title | Page No. | Month |
|---|---|---|
| 1. Learn Always | 69 | January |
| 2. We are One | 93 | February March |
| 3. My Duties | 115 | March April |


6V39HI

E-Book

IRP47E

E-Assessment

B330_5_ENGLISH_LANG

Digital link



Preface.indd 68 11/14/2019 1:38:02 PM

# 1 Learn Always






5th_English_Term_III_Unit_I_Learn Always.indd 69 11/14/2019 1:28:19 PM

# MY LITTLE PICTIONARY



waxwork (v) : a lifesize dummy made of wax.



magician (n) : a person who performs magic tricks.



disguise (v) : to make a person look different to hide their identity.



chit(n) : a short l note on a piece of paper.



statue(n) : a human made figure of a person or animal, that is life-size or larger.



5th_English_Term_III_Unit_I_Learn Always.indd 70 11/14/2019 1:28:20 PM



## LET US LEARN

### FIVE DETECTIVES

It was a sunny afternoon, after a long time in Ooty. Arul and Amudha were sitting on their balcony. The last three vacations were very exciting for them as they were involved in solving three mysterious cases in their city. They missed their friends - Sreejith, Jessy, and Fathima.

They called themselves 'The Five Detectives' or **5D**. They were famous in Ooty for their courage and skill. The police appreciated **5D** for their **admirable** acts. Amudha and Arul missed Pablo. Pablo was Sreejith's dog. He played an important role in solving the mysteries.



**After a week:**

Sreejith, Jessy, Fathima and Pablo came to Amudha and Arul's house. Pablo was jumping with joy and continuously wagging his tail.

Amudha: I am so happy to see you all.

Arul: Now we can all head to solve a **mystery**. It will make our vacation interesting.

Sreejith: Mystery? Did something happen in the town while I was gone?

Arul: No, Sree. Nothing at all.

Amudha urged that they all go the town's fair. She told them about different games, magicians and most importantly the 'Waxworks', a studio with many wax figures inside. After a lot of **pestering**, everyone agreed to go. On their way back, they saw Inspector Velayudham on his bike. He was the inspector of the area. "Inspector Velayudham has been very busy these days," said Amudha. This made the group curious about what was happening in their city that they had no clue of.

**Monday:**

Jessy overheard her father talking on the phone about a robbery that was expected to take place in the museum. Jessy rushed to see her friends in the morning and told them what she heard.

Sreejith: Oh, now I know what Inspector Velayudham is up to.

Jessy: Let us **solve** this case before he does.

Sreejith: I feel we will find more clues if we are near the city area. We will also be able to observe more things. I will disguise myself as that old man we saw on the street.

Everyone agreed to it. Sreejith dressed as the old man. Sreejith sat on the old man's bench, coughed and **sniffed** like him. No one could recognise Sreejith. Soon, a man on a cycle came and sat next to the old man. He said, "Where have you been since yesterday? Take this.



5th_English_Term_III_Unit_I_Learn Always.indd 72 11/14/2019 1:28:21 PM